புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=====================================================================

# நூல்களுக்குரிய சிறப்புகள்

*முனைவர் ம.சரளாதேவி*
*தலைவர் & உதவிப் பேராசிரியர் (பிரிவு-2),*
*தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்-635 601.*

=====================================================================

*ஒரு மொழியின் சிறப்பையும் வளர்ச்சியையும் அறியப் பயன்படுவது நூல். நூலின் இயல்பு, நோக்கம், அமைப்பு, நடை, போன்றவற்றின் மூலம் ஒரு மொழியின் சிறப்பையும் செயல்பாட்டையும் அறிந்துகொள்ள முடியும். நூல் என்பது மொழி தோன்றியவுடன் தோன்றியதல்ல. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே முன்னோர்கள் வாயிலாக செவிவழிச் செய்தியாகச் சொல்லப்பட்ட கதைகள், கருத்துகள் ஓலைச்சுவடி, எழுத்தாணி கொண்டு எழுதப்பட்டு காலம் மாற்றம் பெற்று பேனா, மை, அச்சு என்று படிப்படியாக வளர்ச்சி பெற்று அச்சடிக்கப்பட்ட நூல்களாக வெளிவரத்தொடங்கின. அவற்றில் ஒரு நூல் எப்படி இருக்க வேண்டும், அவற்றிற்குரிய இலக்கணம் என்ன?, நூலுக்குரிய சிறப்புகள் என்ன என்பதைத் தொல்காப்பியம், நன்னூல் குறிப்பிட்டுள்ளன. அவற்றுடன் அருங்கலச்செப்பு, திருக்குறள், நாலடியார், விவேக சிந்தாமணி நூல்கள் குறிப்பிடும் கருத்துகளை ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## நூலின் பெயர்கள்

*தொல்காப்பியம் நூலை முதல் நூல், வழிநூல் என்று இரண்டு வகையாகக் கூறுகிறது. நன்னூல் முதல்நூல், வழிநூல், சார்பு நூல் என்னும் மூன்று வகையில் ஒன்றாக நூல் விளங்கும் என்கிறது. பிற்காலத்தில் மொழிபெயர்ப்பு நூல்களும் தோன்றி வளர்ந்து வருகின்றன. பழங்காலம் முதற்கொண்டு தமிழர் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் பண்பு, உருவம், அமைப்பு, நிறம், அவற்றின் செயல்பாடு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பெயர் வைத்திருக்கின்றனர். அதன் அடிப்படையில் நூல் என்பது ஏடு, சுவடி, ஓலை, தூக்கு, பனுவல், புத்தகம், பிரதி, படைப்பு என்றெல்லாம் பெயர் பெற்றிருக்கின்றது.*

## கல்வெட்டுகள்

*தொடக்க காலங்களில் கல்வெட்டுகளில் எழுதிவைக்கும் பழக்கம் இருந்துள்ளதை கோயில் சுவர்களிலும் கோட்டைகளிலும் காணமுடிகின்றது.ஆனால் இலக்கியங்களையோ, இலக்கணங்களையோ அப்படி எழுதி வைக்கவில்லை என்பதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இசை பற்றிய கல்வெட்டுகள் அறச்சலூர் மற்றும் குடுமியான் மலையில் இருப்பதாக வரலாற்றில் குறிக்கப்பட்டு உள்ளது.*

## ஓலைச்சுவடிகள்

*பழந்தமிழர்கள் இலக்கியத்தை ஓலைகளில் எழுதி வந்துள்ளனர். ஓலைகளில் இரும்பு ஆணி கொண்டு எழுதும்பொழுது புள்ளி வைக்க இயலாது. புள்ளி வைத்தால் ஓலையின் அடுத்த பக்க எழுத்திலும் அப்புள்ளி பதிந்துவிடும். அதுமட்டுமன்றி, ஓலை கிழிந்துவிடவும் கூடும். எனவே ஓலைச் சுவடியின் வரி வடிவத்தில் புள்ளி எழுத்துகளைத் தவிர்த்து எழுத வேண்டிய சூழல் நிலவிற்று. இந்த எழுத்து வடிவங்களை அடுத்த தலைமுறை படித்து அறிந்து கொள்ள*

*முடியாத நிலை ஏற்பட்டதால் அச்சு இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நூல்கள் உருவாக்கப்பட்டன.*

*நூல் - இறைவனால் வெளியிடப்பட்டது*

*நூல் என்பது முதன் முதலில் யாரால் உருவாக்கப்பட்டது என்பதில் பல்வேறு கருத்து முரண்பாடுகள் உண்டு. தொல்காப்பியமும் நன்னூலும் முன்னோர்களால் உருவாக்கப்பட்டது என்கின்றன.. ஆனால் அருங்கலச்செப்பு இறைவனால் வெளியிடப்பட்டது என்று எடுத்துரைக்கின்றது.*

*“வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல் நூலாகும்” (தொல்.1594)*
*“வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்” (நன்.6)*
*“என்றும் உண்டாகி இறையால் வெளிப்பட்டு*
*நின்றது நூல் என்று உணர்” (அரும் செ.9)*

*5 ஆம் நூற்றாண்டில் தோன்றிய தொல்காப்பியமும் 13 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நன்னூலும் முனைவன் என்று ஓரே தன்மையில் கூறி நிற்க. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய அருங்கலச்செப்பு இறைவனால் வெளியிடப்பட்டு எக்காலத்திற்கும் நிலைபெற்றிருப்பது நூல் என்று வெளிப்படையாக இறைவனால் உருவாக்கப்பட்டது என்பதை எடுத்துரைக்கின்றது.*

*துன்பத்தைப் போக்குவது சிறந்த நூல்*

*சிறந்த நூல் எது என்று ஆராய்ந்தால் உயிர்களுக்கு உற்ற துணையாக இருந்து அவர்களின் துன்பத்தைப் போக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.*

*“மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகித்*
*துக்கம் கெடுப்பது நூல்” (அரும்.செ.10)*

*உண்மைப் பொருளை விளக்கி, உயிர்களுக்குத் துணையாய்ப் பொருந்தித் துன்பத்தைப் போக்குவது சிறந்த நூலாகும்.*

*“உரத்தின் வளம் பெருக்கி உள்ளிய தீமை*
*புரத்தின் வளம் முருக்கிப் பொல்லா-மரத்தின்*
*கனக்கோட்டம் தீர்க்கும்நூல் அஃதேபோல் மாந்தர்*
*மனக்கோட்டம் தீர்க்கும்நூல் மாண்பு” (நன்னூல்.25)*

*ஒரு மரத்தின் வளைவு நெளிவுகளைக் கண்டறிவதற்கு மரவேலை செய்யும் தச்சர்கள் பயன்படுத்தும் கருவி, நூல் ஆகும். மரத்தின் வளைவைக் கண்டறிந்து அதனைச் சீர்செய்வதற்கு நூலைப் பயன்படுத்துவதுபோல மனிதனின் மனதில் உண்டாகும் கோணல்களைக் கண்டறிந்து அவன் மனக்கோளாறுகளை ஒழுங்குபடுத்தும் கருவியாக நூல் செயல்படும் என்கிறது நன்னூல்.*

*”வந்தித்துஆய்ந்து ஓதினும் சொல்லினும் கேட்பினும்*
*வெந்து வினையும் விடும்” (அரும்.செப்.176)*

*நூலை மகிழ்ந்து ஆய்ந்து கற்றாலும், இதைப் பிறர்க்கு எடுத்துக் கூறினாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும் தீவினைகள் யாவும் அழிந்து போகும்.*

*”மரபுநிலை திரியா மாட்சிய ஆகி*
*உரைபடு நூல்தாம்” (தொல்.பொருள்.639)*

*தொன்றுதொட்ட மரபிலிருந்து சற்றும் மாறாமல் அமையும் இன்றியமையாத இயல்பினை உடையது நூலாகும். மேன்மைத் தன்மை பொருந்தியதாய் உரைக்கப்படும் என்கிறது தொல்காப்பியம்.*

*”அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது*
*உலகநூ லோதுவ தெல்லாங் – கலகல*
*கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்*
*போஒந் துணையறிவா ரில்” (நாலடியார்.140)*

*ஆய்ந்தறிந்து நல்ல அறிவு நூற்களைக் கற்காது, இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான நூற்களைப் படிப்பதெல்லாம், இவ்வுலகில் கலகல எனக் கூவித் திரியும் ஆரவார வாழ்க்கைக்கு*

உதவலாமே அல்லாது, அந்த நூற்கள் பிறவித் துயரில் தடுமாறும் துன்பத்தில் இருந்து விடுபட துணையாக மாட்டா என்கிறது நாலடியார்.

''பாவம் பகையொடு சுற்றம் இவைசுருக்கி
மோவமோடு இன்றி உணர்'' (அரும். செப்.174)

தீயவினை, பகைவர், உறவு முதலிய உணர்வுகளில்லாது அறநூலை மயக்கம் இல்லாது அறிந்து கொள்ள வேணடும்.

மனதில் உண்டாகும் கவலைகளையும், பாதிப்புகளையும் மாற்றி நல்வழிப்படுத்தக் கூடியதாக விளங்குவது நூல் என்பதை மூன்று நூல்களும் ஒருமித்த கருத்துடன் எடுத்துரைக்கின்றன. அதே சமயத்தில் நாலடியார் நல்ல நூல்கள் மட்டுமே மக்களை நல்வழிப்படுத்தும். மற்ற நூல்கள் வாழ்க்கைக்குத் தேவைப்படாது என்கிறது.

இதிலிருந்து நல்ல நூல்கள் வாழ்க்கையை நல்வழிப்படுத்தும் மற்ற நூல்கள் அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் என்பதை உணர்த்துகின்றன.

நூலின் பயன்

ஒருவர் நூலைக் கற்பதினால் என்ன பயன் கிடைக்கும் என்பதை நூல்கள் எடுத்துரைக்கின்றன.

''விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்'' (குறள்.410)

கற்றவரோடு கல்லாதவரை ஒப்பிட்டுப் பார்த்தால், மக்களோடு விலங்குகளை ஒப்பிடுவது போன்றதாகும்.

''அறம்பொருள் இன்பம்வீடு அடைதல்நூல் பயனே'' (நன்.10)

அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கையும் அடைதல் நூலால் ஏற்படும் பயன்களாகும் என்கிறது நன்னூல்.

''கட்டோடு வீடும் உயிரும் பிறபொருளும்
முட்டின்றிச் சொல்வது நூல்'' (அரும். செப்.61)

ஊழின் இயல்பு வீடு பேற்றின் தன்மை, உயிர்களின் இயல்பு, மற்றப் பொருள்கள் ஆகியவற்றைத் தடையின்றி விளக்கிக் கூறுவது நூலாகும்.

''தூம்பினில் புதைத்த கல்லும்
துகள்இன்றிச் சுடர் கொடாது
பாம்புக்கு பால்வார்த்து என்றும்
பழகினும் நன்மை தாரா
வேம்புக்குத் தேன்வார்த் தாலும்
வேம்பினில் கசப்பு மாறாது
ஆம்பல நூல்கற் றாலும்
துர்ச்சனர் தக்கோர் ஆகார்'' (விவேக சிந்தாமணி.62)

வழியிலே பலபேர் மிதிக்கும்படி புதைக்கப்பட்ட கல் தேய்ந்தாலும் தூசியின்றி ஒளியைத் தருவதில்லை. பாம்புக்குப் பால் வார்த்து நாளும் அதனுடன் பழகினாலும் நன்மையைத் தாராது. வேம்பின் சாற்றில் தேனை ஊற்றிக் குடித்தாலும் அதன் கசப்பு மாறுவதில்லை. அவை போலக் கீழானவர் பல நூல்களைக் கற்றாலும் நல்லவராக விளங்க மாட்டார்.

கல்வி அறிவு அற்றவரை விலங்குடன் ஒப்பிட்டும் கற்றால் நாற்பொருளை அடையலாம் என்றும் ஊழின் இயல்பு, உயிர்களின் இயல்பு ஆகியவற்றை அறியலாம் என்றும் கூறிய நூல்கள், கீழானவர் பல நூல்களைக் கற்றாலும் நல்வராக விளங்க முடியாது என்ற மாறுபட்டக் கருத்தையும் எடுத்துரைக்கின்றன.

நூலின் சிறப்பு

நூலின் சிறப்புகளைப் பல்வேறு அறிஞர்களின் கூற்றுகள் மூலமும் நாம் அறிந்துகொள்ள முடிகின்றது.

நூலின் சிறப்பினைத் தொல்காப்பியம் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. ஆனால் நன்னூல் நூலுக்குரிய அழகு பத்து வகைப்படும் என்கிறது.

''சுருங்கச் செல்லல் விளங்க வைத்தல்

நவின்றோர்க்கு இனிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை உடைமை ஆழமுடைத்து ஆதல்
முறையின் வைப்பே உலகம்மலை யாமை
விழுமியது பயத்தல் விளங்கு உதாரணத்தது
ஆகுதல் நூலிற்கு அழகுஎனும் பத்தே"(நன்னூல்.எழுத்து.13)

1.சொற்களைத் தேவையின்றி விரிக்காமல் சுருக்கிக் கூறுதல், 2.சுருங்கச் சொல்லினும் தெளிவுபடக் கூறுதல், 3.கற்போர்க்கு இனிமை தரும் சொற்களைக் கூறுதல், 4.குற்றமற்ற சொற்களைச் சேர்த்தல், 5.இடத்திற்கு ஏற்ற சந்த நயம் புலப்பட அமைத்தல், 6.கற்கக் கற்க ஆழ்ந்த கருத்தை உடையதாதல், 7.எழுத்து, சொல், பொருள், இயல், அதிகாரம் போன்றவற்றைக் காரண, காரிய முறைப்படி அமைத்தல், 8.சான்றோர் வழக்கொடு மாறுபாடு இன்றிக் கூறுதல், 9.சிறந்த பொருளை வெளிப்படுத்துதல், 10.எடுத்துக்காட்டுகளைக் கொண்டு பொருளை விளங்க வைத்தல் என்பனவாகும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

இக்காலத்தில் மின் நூல்கள் (e-books) வளர்ச்சி அடைந்து வந்தாலும் இதற்கெல்லாம் அடிப்படை இலகண்ண இலக்கிய நூல்கள் என்பது முற்றிலும் உண்மை.

ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்று மேல்நாட்டு அறிஞர் விக்டர் ஹியுகோ கூறியுள்ளார்.

அறிவை விரிவு செய் என்பான் பாரதி. எட்டயபுர அரண்மனையில் மிகப்பெரிய நூலகம் பாரதியால் உருவாக்கப்பட்டது..

ஒரு குறள் போதும் என் வாழ்வு முழுக்க வாழ்ந்து விடுவேன் என்பார் புத்தகப்பிரியரும் முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல்கலாம்.

"உலகின் கிடக்கையும் ஊழியும் நிலையும்
மலைவின்று உரைப்பது நூல்" (அரும்.. செப்.59)

உலகத்தின் இயல்பையும் காலத்தின் நிலைமையையும் மயக்கம் சிறிதும் இல்லாது உரைப்பது நூல் ஆகும்.

"இல்லறம் ஏனைத் துறவறம் என்றுஇவற்றைப்
புல்ல உரைப்பது நூல்" (அரும்.செப்.60)

இல்லற நெறியையும் துறவற நெறியையும் பொருத்தமாக விளக்குவது நூல்.

"எழுதரிது முன்னம் எழுதியபின் அஃதைப்
பழுதறவா சிப்பரிது பண்பா- முழுதும்அதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தான்அந் நிலை" (விவேக சிந்.26)

முன்னே ஒரு நூலைப் பிறர்க்குப் பயன்படுமாறு ஒருவர் எழுதுதல் அரியது. அவ்வாறு எழுதிய பின்பு அந்த நூலைக் குற்றம் நீங்க ஒருவர் படிப்பது அரியதாகும். அவ்வாறு படிப்பினும் விருப்பமாக அதை இடைவிடாமல் நன்கு மனப்பாடம் செய்து முறைப்படி கற்றுக் கொள்ளுதல் அரிதாகும். அங்ஙனம் கற்றாலும் அதில் நல்ல பொருளைக் காண்பது அரிதாகும். அப்பொருளைக் காணினும் அந்நூல் கருத்தின் உறுதியான நிலையில் நடத்தல் மிகவும் அரியதாகும் என்கிறது விவேக சிந்தாமணி.

நூலின் சிறப்புகள் பற்றி பல்வேறு அறிஞர்களும் இலக்கண, இலக்கிய நூல்களும் எடுத்துரைத்தாலும் அவற்றில் சிறந்த நூல்களைத் தேடிப் படித்து அவற்றை வாழ்க்கையில் கடைபிடிப்பதே நூலின் சிறப்பாகும்.

முடிவாக

இக்காலத்தில் பல்வேறு நூல்கள் பெருகி வளர்ச்சி பெற்றிருந்தாலும் அக்காலத்தில் தோன்றிய நூல்களே இக்காலத்திற்கும் அடித்தளமாக அமைகின்றன.

இக்காலத்தில் மின் நூல்கள் (e-books) வளர்ச்சிபெற்று வந்தாலும் அக்காலத்து நூல்களுடன் ஒப்பிடுகையில் அவை மனதைப் பண்படுத்தும் வகையில் கண்களுக்குப் பாதிப்பு இல்லாத நிலையில் அமைந்துள்ளன.

மக்கள் நல்லவர்களாக இருந்தால் மட்டுமே நூல்கள் அவர்கள் வாழ்க்கையை மாற்றம் அடையச் செய்யும்.

*நல்ல நூல்களை விட்டுவிட்டு வேறு நூல்கள் கற்பதினால் ஒரு பயனும் இல்லை என்பதை நூல்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.*

*மனிதன் நினைத்தால் நூல்கள் படிப்பதன் வாயிலாக அறிவாற்றல் உடைய மாமனிதனாக வளர்ச்சி அடைய முடியும் என்பதில் ஐயமில்லை.*

துணைநின்ற நூல்கள்


1. *ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் - பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.*
2. *ச.திருஞானசம்பந்தம், நன்னூல் – எழுத்ததிகாரம், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2009.*
3. *அ.மாணிக்கம், அருங்கலச்செப்பு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2003*
4. *கோ.பெரியண்ணன், திருக்குறள், வனிதா பதிப்பகம், சென்னை, 2019.*
5. *ஞா.மாணிக்கவாசகன், நாலடியார், உமா பதிப்பகம், சென்னை, 2010.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********